செய்தி வெளியீடு எண்:1013 நாள்:01.11.2021

செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மடுவன்கரையில் உள்ள மாநகராட்சி பள்ளியைப் பார்வையிட்டு மாணவர்களை வரவேற்றார்.

கொரோனா பெருந்தொற்றால் கடந்த ஒன்றரை ஆண்டு வருடங்களுக்கு பிறகு இன்று அனைத்து மாவட்டங்களிலும் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை உள்ள பள்ளிகள் சுழற்சி முறையில் திறக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கிண்டி மடுவன்கரையில் உள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளியைப் பார்வையிட்டு மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் இன்று காலை கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி,பெத்தநாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு இனிப்பு மற்றும் பூங்கொத்து வழங்கி மாணவர்களை உற்சாகமுடன் வரவேற்றார்.

அனைத்து மாவட்டங்களிலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாவட்ட ஆட்சியர்களும், உள்ளாட்சிப் பிரதிநிதிகளும், கல்வித்துறை அதிகாரிகளும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் இனிப்பு மற்றும் பூங்கொத்து வழங்கி மாணவர்களை வரவேற்றனர்.

அரசுப் பள்ளிகளில் மொத்தம் உள்ள 39,13,007 மாணவர்களில் 76 சதவீத மாணவர்கள் அதாவது, 28,95,625 மாணவர்கள் பள்ளிகளுக்கு இன்று வருகை புரிந்துள்ளனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9